[5th November 1965

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மிகப் பின்தங்கிய வகுப்பினர் களுக்கும் சலுகை இருக்கிறது, அரிஜனங்களுக்கும் சலுகை இருக் கிறது. வயது போன்றவைகளில் சலுகை இருக்கிறது. எத்தனை பேர்கள் எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதிலும் சலுகைகள் இருக்கின்றன. ஆனால், பரீட்சையில் வித்தியாசம் கிடையாது.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஆண்டும் அரசாங்கம் வெளியிடும் பட்டியலிலே மிகப் பின்தங்கிய வகுப்பினர் என்று பிரித்தெடுக்கப்பட்டிருக்கிறது. அந்த மிகப் பின்தங்கிய வகுப்பினரை அரிஜனங்கள் பட்டியலுடன் இணைப்பதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதற்குத் தனிக்கேள்வி வேண்டும்

திரு. செ. மாதவன் : விண்ணப்பத்திலே தேர்வுக்குத் தகுதி நிர் ணயிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தேர்விலே மார்க் போன்ற சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்தச் சலுகைகள் மிகப் பின்தங்கிய வகுப்பினருக்கும் கொடுக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : விண்ணப்பம் செய்துகொள் வதிலே மட்டும் சலுகை இருக்கிறது. ஆனால் பரீட்சை எழுது வதில் வித்தியாசம் இல்லை.

Bus service between Madras and Ranipet

* 290 *Q.*—SRI C. KOTHANDARAMA BAGAVATHAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal under consideration of the Government to ply two buses between Madras and Ranipet in North Arcot district; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No.

(*b*) Does not arise.

ராணிப்பேட்டையில் எக்ஸ்பிரஸ் பஸ்கள் நிறுத்தல்

■ 291 கேள்வி—திரு. ஆர். அப்துல் கனீல்: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா:—

(அ) ராணிப்பேட்டை வழியாகச் செல்லும் எக்ஸ்பிரஸ் பஸ் கள் அங்கு நிறுத்தப்படாமல் செல்வது அரசாங்கத்தின் கவனத் திற்குக் கொண்டு வரப்பட்டதா?

(இ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Representations have been received requesting that Ranipet may be made a stopping place for the State Transport buses plying on the routes from Madras to Coimbatore and from Madras to Bangalore and for the private buses plying on the route from Madras to Vellore.

(*b*) The request is under consideration.

5th November 1965]

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இடையிலே நிற்கக் கூடிய ஸ்டேஷன்களை நிர்ணயிப்பதில் நம்முடைய இலாகா எந்த அடிப்படையில் நிர்ணயிக்கிறது? தூரத்தை வைத்து நிர்ணயிக்கிறதா? அல்லது மக்கள் அதிகமாக ஏறக்கூடிய பெரிய நகரத்தில் உள்ள இடத்தை நிர்ணயிக்கிறதா? என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எக்ஸ்பிரஸ் பஸ்கள் 25 மைலுக்கு இடையில்தான் நிறுத்தவேண்டுமென்ற விதி இருக்கிறது. சென்னையிலிருந்து 250 மைல் தூரத்தில் ஒரு ஊர் இருக்குமானால் இடையிலே பத்து இடங்களில் நிற்க வேண்டியிருக்கும். அந்த பத்து இடங்களில் நிறுத்தும்போது எங்கே அதிகமாக வருமானம் வருமோ அந்த இடங்களில்தான் நிறுத்துகிறோம்.

திரு. ம. கமலநாதன் : எக்ஸ்பிரஸ் பஸ்களை ராணிப்பேட்டையில் நிறுத்த வேண்டுமென்று ரெப்ரசென்டேஷன் வந்திருப்பது போன்று வேறு இடங்களிலிருந்து ரெப்ரசென்டேஷன்கள் வந்திருக்கின்றனவா? அவைகள் பரிசீலனையில் இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதற்கு வேறு கேள்வி போடவேண்டும்.

விருத்தாசலம் முதலிய ஊர்கள் வழியாக எக்ஸ்பிரஸ் பஸ்

* 292 கேள்வி.—திரு. இரா. நாராயணன் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) சென்னையிலிருந்தும், வேலூரிலிருந்தும் திருச்சிக்குச் செல்லும் சர்க்கார் துரித மோட்டார் வண்டிகளில் ஒன்றை உளுந்தூர் பேட்டை, விருத்தாசலம், திட்டக்குடி, தொழுதூர் வழியாக விடும் உத்தேசம் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) No.

(b) Does not arise.

திரு. இரா. நாராயணன் : வேலூரிலிருந்து எக்ஸ்பிரஸ் பஸ்கள் உளுந்தூர்பேட்டை வரையிலும் போதிய பிரயாணிகள் இல்லாமல் பாதி காலியாக வருகிறது. அதை உளுந்தூர்பேட்டையிலிருந்து விருத்தாசலம், திட்டக்குடி, வழியாகக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லுகிறபடி மாற்றி அமைத்தால் 14 மைல் கூட ஆகும். முப்பத்தி ஐந்து நிமிஷம் அதிகம் பிடிக்கும்.